(ஈ) பல்லாவரம் பெரிய ஏரி மற்றும் தடங்கம், தருமபுரி நகராட்சி பகுதிகளில் குப்பைக் கழிவுகளால் ஏற்படும் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர வேண்டும். விளக்கமாகப் பேச முடியாது. சொல்லுங்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்லாவரம் பெரிய ஏரி என்பது நகராட்சிப் பகுதியில் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. கடந்த 35 வருடங்களாக அந்தப் பகுதியில் குப்பைகளைக் கொட்டி, அந்தப் பகுதியில் தொற்றுநோய் பரவும் அபாயம் இருக்கின்றது. அங்கு 1¼ இலட்சம் டன் குப்பைகள் தேங்கிக்கிடக்கின்றன. இதைத் தவிர்ப்பதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நமது அண்ணன் தளபதி அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கும்போது, வேங்கடமங்கலத்தில் 50 ஏக்கர் நிலத்தினைப் பெற்றுத் தந்து, ஜவஹர்லால் நேரு புனரமைப்புத் திட்டத்தின்கீழ் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பணிகள் தொடங்கப்பட்டன. தற்போது உங்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்தப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இருந்தாலும் அந்தக் குப்பைகள் இன்னமும் அகற்றப்படாமல் உள்ளதால், தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கடந்த 12–8–2016 ஆம் ஆண்டு மறைந்த முதல்வர் அவர்கள் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருங்கள். நீங்கள் எனது அறையில் வந்து கேட்கும்போது நான் கவனத்தை ஈர்த்து, உட்கார்ந்துவிடுகிறேன்; எனக்கு அனுமதி கொடுங்கள் என்றுதான் கேட்டீர்கள். நான் அனுமதித்த பிறகு, எல்லோரும் இப்படிப் பேசினால், நான் எப்படி நேரத்தைக் கடைப்பிடிக்க முடியும். எனவே, கவனத்தை ஈர்த்து, அமருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.*

திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதோ முடித்துவிட்டேன், அவ்வளவுதான். கடந்த 12–8–2016 அன்று மறைந்த முன்னாள் முதல்வர் அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற ஏரிகளில் நீராதாரத்தைப் பெருக்க வேண்டும் என்றும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும்*

2017 ஜூலை 12] [திரு. இ. கருணாநிதி]

என்றும் புதிய அறிவிப்பினை அறிவித்தார்கள். ஆனால், 1¼ இலட்சம் டன் குப்பைகள் இன்னமும் அகற்றப்படாமல் உள்ளன. எனவே, அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மூவரசம்பேட்டையில் கூட. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள் தருமபுரியில் இதே பொருள் பற்றிய பிரச்சினை குறித்து காலையில் என்னிடத்தில் கேட்டார்கள். எனவே, நீங்களும் கவனத்தினை ஈர்க்கிறேன் என்று சொல்லி அமருங்கள்.*

திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகராட்சியில் 33 வார்டுகளில் உள்ள குப்பைகள் எனது கிராமத்திற்கு அருகில் கொட்டப்படுகின்றன. கடந்த 2011 ஆம் ஆண்டு அன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குப்பை கொட்டப்படுவது குறித்த பிரச்சினையை நீங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அமருங்கள்.*

திரு. பெ. சுப்ரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடங்கம் கிராமத்திற்கு அருகில் அந்தக் குப்பைகள் கொட்டப்பட்டு, அடிக்கடி தீ விபத்து ஏற்படுகின்றது. ஏறத்தாழ இரண்டு நாட்களாக, நேற்றைக்குக்கூட கடுமையான தீ விபத்து ஏற்பட்டது. மக்கும் குப்பை, மக்காத குப்பை எனப் பிரித்து உரம் தயாரிக்கும் விதமாகத்தான் அந்தக் குப்பைகள் அங்கு கொட்டப்பட்டுள்ளன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். இரண்டும் குப்பை பற்றிய பிரச்சினைகள்தான். அதே பிரச்சினையைத்தான் அவர்களும் சொல்கிறார்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் நகராட்சிக்கு தனிப்பட்ட முறையில் உரக் கிடங்கு இல்லாத சூழ்நிலையில் நகராட்சிமூலம் சேகரிக்கப்படும் குப்பைகளைப் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான பல்லாவரம் பெரிய ஏரியில் கணபதிபுரம்*

பகுதியில் உள்ள மொத்த பரப்பளவில் ஒரு பகுதியில், சுமார் 5 ஏக்கர் நிலப் பரப்பில், குப்பைகள் கிட்டத்தட்ட 35 ஆண்டுகளாகக் கொட்டப்பட்டு வந்துள்ளன என்று உறுப்பினரே சொல்லியிருக்கிறார். குப்பைகளை திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் கையாளுவதற்காக தாம்பரம், செம்பாக்கம், பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர் ஆகிய நகராட்சிகளில் ரூ.99 கோடியில் வேங்கடமங்கலம் கிராமத்தில் ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின்கீழ் புதிய திட்டம் உருவாக்கப்பட்டது. கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக நகராட்சியால் பெறப்படும் குப்பைகள் பெரிய ஏரியில் கொட்டப்படாமல் வேங்கடமங்கலத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மாண்புமிகு அம்மா அவர்களின் காலத்தில்தான் இது வேகப்படுத்தப்பட்டது என்று நீங்களே பதிவு செய்தீர்கள். 2001–2006–ல்தான் அம்மா அவர்களின் ஆட்சியில் கடைசியாக ஆய்வு செய்யப்பட்டது. அதன்பிறகு nNURM Scheme–ல் எடுத்தார்கள். அதனையும் நீங்கள் பதிவு செய்தீர்கள். இதில் நம்முடைய அம்மா அவர்களுடைய ஆட்சிதான் முழுமையாக தனிக் கவனம் செலுத்தி முடித்தது என்று சொல்லிக்கொள்கிறேன். அதுபோல், பெரிய ஏரியில் கடந்த 2 ஆண்டுகளாகக் குப்பைகள் கொட்டப்படாமல் வேங்கடமங்கலத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றன. பெரிய ஏரியின் ஒரு பகுதியில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை அப்புறப்படுத்தக்கோரி தென் மண்டல பசுமைத் தீர்ப்பாயத்தில் வழக்கு நடைபெற்று வருகின்றது. ஏற்கெனவே ஏரியில் கொட்டப்பட்ட குப்பைகளை விஞ்ஞான முறையில் மூடுவதற்காக Scientific closure வேங்கடமங்கலம் திட்டத்தில் ரூ.3.41 கோடிக்கு வழிவகை செய்யப்பட்டிருந்தது.

முற்பகல் 11–30

மேற்படி தீர்ப்பாயத்தில், வேங்கடமங்கலம் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட விஞ்ஞான முறைப்படி மூடுவதற்குப் பதிலாக, புதிய திட்டமாக 5 ஏக்கர் அளவில் உயிரியல் அகழாய்வு முறையில், biomining திட்டத்தின்படி ஏரியிலிருந்து முழுவதும் அகற்றி, மழை நீரை தேக்கிடும் வகையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சராசரியாக, 1,25,000 கன மீட்டர் அளவில், பல்லாவரம் பெரிய ஏரியில் பல ஆண்டுகளாகக் குப்பைகள் தேக்கி வைக்கப்பட்டுள்ளதாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தேக்கி வைக்கப்பட்டுள்ள

குப்பைகளை உயிரியில் அகழாய்வு முறையில் biomining முறையில் அப்புறப்படுத்துவதற்கு 7 கோடி ரூபாய் அளவில் விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் Swachh Bharat Mission–ல் எடுத்துக்கொள்ள நிருவாக அனுமதி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், தருமபுரி நகராட்சிக்குச் சொந்தமான கானகம் பகுதியில் 11.05 ஏக்கர் பரப்பளவில் திடக் கழிவு மேலாண்மைப் பணிகள் மற்றும் உரம் தயாரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உரத் திடலில், தினமும் 32 மெட்ரிக் டன் குப்பைகள் கொட்டப்பட்டு, திடக் கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கு பகலில் நான்கு துப்புரவுப் பணியாளர்களும், ஒரு துப்புரவு மேற்பார்வையாளரும், இரவில் இரண்டு துப்புரவுப் பணியாளர்களும், காவல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த உரத் திடலில் முழு சுற்றுச் சுவர் அமைப்பு, எடை மேடை, 15,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, உட்புற தார்ச்சாலைகள், மின் மோட்டாருடன்கூடிய இரண்டு ஆழ்துளைக் கிணறுகள், காவலர் குடியிருப்பு இரண்டு, உரத் திடலில் தீ விபத்து ஏற்பட்டால், தீயை அணைக்க குழாய் வசதிகள், 10 எண்ணிக்கையில் தீயணைப்புச் சாதனங்கள் ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோல், இந்த உரக் கிடங்கில் Swachh Bharat Mission, தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் 1.7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திடக் கழிவு மேலாண்மைப் பணிகள், இயந்திரங்கள் அமைத்தல் மற்றும் தீ தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குப்பைகளை அகற்ற 8 இலகு இரக வாகனங்கள், 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இயந்திரங்கள் வைப்பறை மற்றும் மேற்கூரை அமைத்தல், ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தீ தடுப்பு நடவடிக்கைகள், 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பசுமை வளையம் அமைத்தல், 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மின்

விளக்குகள் அமைத்தல், 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தண்ணீர் வசதிகளை ஏற்படுத்துதல், 2 இலட்சம் ரூபாய் செலவில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள், 10–7–2017 அன்று 4-15 மணியளவில் குப்பைகளுக்கிடையே உள்ள அதிக வெப்பத்தின் காரணமாக ஓரிடத்தில் ஏற்பட்ட தீ, உரத் திடல் மற்றும் பிற இடங்களுக்கும் பரவியது. தகவல் கிடைத்தவுடன், நகராட்சியின் தண்ணீர் வாகனம் மற்றும் மண் அள்ளும், மண் நிரப்பும் வாகனம் Escalator–cum–Loader மூலம் தீ முற்றிலும் அணைக்கப்பட்டது. மேலும், இரவு முழுவதும் தீயணைப்பு வாகனம் மற்றும் நகராட்சியினுடைய தண்ணீர் வாகனம், மண் அள்ளும் மற்றும் மண் நிரப்பும் வாகனம் ஆகியவற்றைக் கொண்டு தீயணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது தீ முற்றிலும் அணைக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மூன்று தீயணைப்பு வாகனங்கள், இரண்டு தண்ணீர் வாகனங்கள், நகராட்சியின் மண் அள்ளும் மற்றும் மண் நிரப்பும் வாகனம் ஒன்று, தனியாருக்குச் சொந்தமான மண் அள்ளும் மற்றும் மண் நிரப்பும் வாகனம் ஒன்று மற்றுமொரு தண்ணீர் வாகனம் என மொத்தம் எட்டு வாகனங்களைக் கொண்டு புகையைக் கட்டுப்படுத்தும் பணிகள், நகராட்சியின் இரவு துப்புரவுப் பணியாளர்கள், 5 துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள், 3 துப்புரவு ஆய்வாளர்கள், 1 துப்புரவு அலுவலர் ஆகியோர்மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, இனிமேல் அதுபோன்ற சூழ்நிலை ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) பகுதிநேர பள்ளி ஆசிரியர்களை நிரந்தரமாக்குதல் மற்றும் நீட் தேர்வு–மாணவர் சேர்க்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) திடீரென்று இப்படியெல்லாம் எழுந்து நிற்கக் கூடாது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு பள்ளி கல்வித் துறை அமைச்சரின் கவனத்தை ஈர்ப்பார். சொல்லுங்கள்.